மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 27/2015 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | சந்திரசேகர் (எ) சந்திரசேகரன் | நாள் | 28.11.2022 |
| தகப்பனார் பெயர் | சண்முகம் | | |

**1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

5) எந்தெந்த சர்வே எண்களுக்காக நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், தற்போது சர்வே எண் எனக்கு சரியாக நினைவில்லை. தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர் 73 செண்டுகள் என்றால், அதுமட்டுமல்ல அதனுடன் சேர்த்து 30 செண்ட் மண் எடுத்த குட்டையும் சேர்த்துதான் தாவா சொத்தாகும்.

6) நான் ஊரில் இல்லாத சமயத்தில் என் அண்ணன் மகன் அருள்குமார் எனக்கு பங்கு உரிய நிலத்தில் போர் போட்டுவிட்டார். என் தந்தை 2008ம் ஆண்டு தாவா சொத்து குறித்து உயில் எழுதி வைத்துள்ளார். அந்த உயில் படி எனக்கும், என் அண்ணன் மகனுக்கும் சேரவேண்டிய சொத்துக்களை பாகம் பிரித்துக்கொடுக்குமாறு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

7) வாரிசுரிமைப் படி என் அண்ணன் மகன் அருள்குமாருக்கு தாவா சொத்தை பாகம் பிரித்து கொடுக்க எனக்கு ஆட்சேபனை எதுவும் இல்லை என்றால், சரிதான்.

8) அ.வ.எண்.122/2015 என்ற வழக்கை இந்த பிரதிவாதிகளான அருள்குமார், கவிதா, இந்திராணி ஆகியோர்கள் எனக்கு எதிராகவும், மற்ற நான்கு நபர்களுக்கு எதிராகவும் தாக்கல் செய்துள்ளனர் என்றால், சரிதான். அந்த வழக்கு எந்த சர்வே எண்ணுக்கு எவ்வளவு விஸ்தீரணத்திற்கு பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டது என்றாலும், மேற்படி வழக்குரையில், என்ன செக்குபந்தி விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், அதுகுறித்து எனக்கு தெரியாது.

9) 1ம் பிரதிவாதி இந்திராணியின் கணவர் பெயர் கோவிந்தராஜ் என்றால், சரிதான். மேற்படி கோவிந்தராஜின் தந்தை பெயர் சண்முகம் என்றால், சரிதான்.

அ.வ.எண்.27/2015 என்ற வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து சண்முகத்திற்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால், அது சண்முகத்தின் தந்தை வழியில் பாத்தியப்பட்ட பூர்வீக சொத்தாகும். சண்முகத்தின் தந்தை பெயர் பெரியண்ண கவுண்டர் ஆகும்.

10) பெரியண்ண கவுண்டருக்கு இரண்டு ஆண் வாரிசுகளும், ஏழு பெண் வாரிசுகளும் ஆக மொத்தம் 9 வாரிசுகள் உள்ளனர். பெரியண்ண கவுண்டர் அவர்களது வாரிசுகளுக்கு பாகபிரிவினை செய்து கொடுத்ததன் அடிப்படையில் மேற்படி சண்முகத்திற்கு எந்தெந்த சர்வே எண்களில் எவ்வளவு சொத்துக்கள் பாத்தியப்பட்டுள்ளது என்றால், சர்வே எண் தற்போது எனக்கு நினைவில்லை. ஆனால், மேற்படி பாகபிரிவினையின் படி சண்முகத்திற்கு மொத்தம் இரண்டு ஏக்கர் பாத்தியப்பட்டுள்ளது.

11) ஆனால் மேற்படி அ.வ.எண்.27/2015 என்ற வழக்கு எங்களால் மொத்தம் 1 ஏக்கர் 73 செண்ட் நிலத்திற்குதான் போடப்பட்டுள்ளது என்றால், சரிதான். மீதமுள்ள 27 செண்டுகள் நிலத்திற்கான பட்டா என் தாத்தா பெரியண்ண கவுண்டர் பெயரில் தற்போது உள்ளது என்றால், சரிதான் ஆனால் அது என் தந்தை சண்முகத்திற்கு பாத்தியப்பட்டதுதான். தற்போது பட்டாவில் பெயர் மாற்றம் செய்ய மனு கொடுத்துள்ளோம்.

12) மேற்படி 27 செண்ட் நிலத்தையும் சேர்த்துதான் 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகளுக்கு நான் பாகம் பிரித்துக்கொடுக்க தயாராக உள்ளேன் என்றால், அருள்குமாருக்கும், கவிதாவிற்கும் பிரித்துக்கொடுக்க தயாராக உள்ளேன். இந்திராணிக்கு பிரித்துக்கொடுக்க இயலாது. ஏன் என்றால், இந்திராணி என் அண்ணன் கோவிந்தராஜ் இறந்த பிறகு வேறு திருமணம் செய்துகொண்டு தற்போது அந்த திருமணத்தின் மூலம் 1 பெண் குழந்தை உள்ளது. அதனால் பிரித்துக்கொடுக்க இயலாது.

13) அ.வ.எண்.122/2015 என்ற வழக்கை 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகள் என்னிடம் பாகம் கேட்டு தாக்கல் செய்யவில்லை என்றாலும், 1ம் பிரதிவாதி

இந்திராணியின் கணவர் கோவிந்தராஜ்க்கு வாய்மொழி பாகபிரிவினை மூலம் பாத்தியப்பட்ட சொத்தை பொறுத்து நாங்கள் எந்த தொந்தரவும் செய்யக்கூடாது என்று உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும், என் தந்தை சண்முகம் 2008ம் ஆண்டு எழுதி வைத்த உயில் செல்லாது என விளம்புகை கோரியும் தான் இந்த வழக்கை தாக்கல் செய்தள்ளனர் என்றால், சொத்து எதையும் இதுவரை என் அண்ணனுக்கு பிரித்துக் கொடுக்கப்படவில்லை.

14) பெரியண்ண கவுண்டரின் சொத்துக்கள் என் தந்தை சண்முகத்திற்கு பாகபிரிவினை பத்திரம் மூலம் பிரித்துக்கொடுக்கப்பட்டதா? என்றால், அதுகுறித்து எனக்கு தெரியாது. மேற்படி 2 ஏக்கர் சொத்து என் தந்தைக்கு இதுவரை எவ்வாறு பாத்தியப்பட்டது என நான் தெரிந்துகொள்ளவில்லை என்றால், சரிதான் .

15) இவ்வழக்கில் தாவா சொத்து குறித்து வில்லங்க சான்றிதழ் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால், அதுகுறித்து எனக்கு தெரியாது. நான் எட்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன். தாவா சொத்து என் தந்தையின் சுய சம்பாத்திய சொத்து என 5ம் பத்தியில் நான் சொல்லியிருந்தால் அது தவறானது என்றால், தாவா சொத்து என் தந்தையின் பூர்வீக சொத்துதான். ஆனால், ஒரு சொத்து மட்டும் அவர் சுயமாக சம்பாதித்தது.

16) என் தந்தை சண்முகம் 3ம் வகுப்பு வரை படித்துள்ளார். அவர் விவசாயம் தான் செய்து வந்தார். மேற்படி விவசாயம் அவருக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட 2 ஏக்கர் நிலத்தில்தான் செய்து வந்தார். மேற்படி 2 ஏக்கர் நிலத்திலிருந்து பெறப்பட்ட வருமானத்தை வைத்துதான் நான் சொன்ன சுய சம்பாத்திய சொத்தை வாங்கியுள்ளார் என்றால், சரிதான். என் அம்மாவிற்கு என் அம்மாவின் பெற்றோர் வீட்டில் போட்ட நகைகளை விற்றும், மேற்படி சுய சம்பாத்திய சொத்தை வாங்குவதற்று என் அம்மா உதவியுள்ளார்.

17) என் அம்மாவிற்கு அவரது வீட்டில் எவ்வளவு நகை போட்டார்கள் என்ற விவரமும், அதை எவ்வளவு தொகைக்கு விற்பனை செய்தார்கள் என்ற விவரமும், மேற்படி

தனிப்பட்ட சொத்தை எவ்வளவு தொகைக்கு எந்த வருடத்தில் வாங்கினார்கள் என்ற விவரமும் எனக்கு தெரியாது என்றால், சரிதான்.

(1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/−திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.